4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண்.569/2022 நாள்: 03.02.2025 வா.சா.1
கணேசன்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

குறுக்கு விசாரணை -

நான் தாராபுரம், எருக்கலாம்பாளையத்தில் வசிக்கிறேன். எனக்கு அங்கு சொந்த வீடு, தோட்டம் உள்ளது என்றால் சரிதான். நான் அங்கு விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு பிரதிவாதி சாந்துபீபி என்பவரை அவரது மகள் ரஃபுனிஷா மூலமாக தான் தெரியும். ரஃபுனிஷா குறிச்சி கோட்டை, ஆலாம்பாளையம் பிரிவில் பெட்ரோல் பங்க் நடத்தி வருகிறார் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களை கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்ட பிறகு அந்த ஆவணத்தில் குறிப்பிட்ட காலக்கெடு முடிவடைந்தபிறகு மீண்டும் புதுப்பிக்கப்பட்டதா என்றால் ஆமாம். ஆனால், அது பதிவு செய்யப்படவில்லை. வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. நானும், பிரதிவாதியும் பேசி அதன் பிறகு தான் காலநீட்டிப்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் அளவுகள் சரியாக தெரியாது என்றால் சரிதான். ஆனால், 4 சென்ட் இருக்கும். கிரைய ஒப்பந்த காலக்கெடு முடிவடைந்த பிறகு கிரையம் எழுதி பெற்றுக்கொள்ள தயாராக இருப்பதாக வழக்கறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். ரூ.9,50,000/- கிரையமுன் பணம் என குறிப்பிடப்பட்டு, பாக்கி தொகை ரூ.1,00,000/- என்றும், கிரைய ஒப்பந்தத்தில் எழுதப்பட்டிருந்தது. சொத்தை கிரையம் பெறுவதற்காக பணம் கொடுக்கப்படவில்லை என்றும் கடனாக தான் ரூ.9,50,000/- கொடுக்கப்பட்டு, அந்த கடனுக்கு ஆதரவாக தான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சொத்தை கிரையம் பெறுவதற்காக மேற்படி தொகை கொடுக்கப்பட்டிருந்தால், மேற்படி சிறு

தொகைக்காக கால அவகாசம் வழங்கப்பட்டிருக்காது என்றும், அப்போதே சொத்தை கிரையம் பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. என்னிடம் தொகை பாதிக்கு மேற்பட்ட தொகையை பிரதிவாதி செலுத்திவிட்டார் என்றும், நான் கூடுதல் வட்டி பெறுவதற்காக தவறான விபரங்களை கூறி, கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. கிரையம் பெறுவதற்காக ஒப்பந்தம் போட்டிருந்தால், காலக்கெடு முடிவடைவதற்குள் கிரையம் பெறுவதற்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பி கிரையம் பெற நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு செலுத்திய தொகை போக மீதி பாதி தொகையை வட்டியுடன் செலுத்த தயாராக உள்ளார் என்றும் நான் அதனை பெற்றுக்கொண்டு, வழக்கை வாபஸ் பெற தயாராக உள்ளேனா என்றால் இல்லை. தவறான விபரங்களை கூறி உண்மை விபரங்களை மறைத்து, வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/-C.Rajalingom,B.A.B.L
4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.